# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மனியிலுள்ள மாநாட்டுத் திடலில் 01.06.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்ஹம்துலில்லாஹ்! இன்றிலிருந்து ஜெர்மனியின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. இந்த வருடம் மாநாட்டு அமைப்பாளர்கள் கடந்த வருட குறைபாடுகளைக் கண்முன் நிறுத்தியவாறு கொஞ்சம் சிறந்த நிலையை உருவாக்க முயற்சி செய்துள்ளார்கள். அதில் முதலாவதாக, சப்தம் சரியாக உள்ளது. அதில் எந்த அளவு சிறந்த நிலை உருவாகியுள்ளது என்பது இன்று தெரிய வரும். கடந்த வருடம் இந்த ஹாலில் அதாவது கால்ஸ்வேயில் முதன்முறையாக மாநாடு நடைபெற்றது. எனவே புதிய இடத்தில் ஏற்படுகின்ற சில கஷ்டங்களும் சில குறைகளும் ஏற்பட்டன; ஏற்படுகின்றன. இந்த விஷயம் மாநாட்டு அமைப்பாளர்கள் மீது மிக அதிகமாக ஆட்சேபனை செய்வதற்கு உரிய விஷயமல்ல. மாநாட்டு அமைப்பாளர்கள் தங்களது தவறுகளின் அல்லது குறைகளின் பக்கம் கவனம் செலுத்தாமலும் அதை சீர்திருத்த முயற்சிகளைச் செய்யாமலும் இருந்திருந்தால் அது ஒருவகையில் ஆட்சேபனைக்குரிய விஷயம். மாநாட்டு அமைப்பாளர்கள் தங்கள் பலவீனங்களை கண்முன் நிறுத்தியவாறு சில குறைகளையும் பலவீனங்களையும் அகற்றுவதற்கு முயற்சி செய்துள்ளார்கள். புதிய இடமாக இருந்ததாலும் தவறான கணிப்பின் காரணமாகவும் கடந்த வருடம் செலவுகள் அதிகமாகின. அதையும் குறைப்பதற்கு அவர்கள் முயற்சி செய்துள்ளார்கள். ஆனால், இப்போதும் கூட நிச்சயமாக சீர்திருத்தம் ஏற்படவும் சிறந்த நிலை உருவாகுவதற்கும் உள்ள வாய்ப்புகள் இருக்கின்றது. இதன் மீது மாநாட்டு அமைப்பாளர்களின் பார்வை இருக்க வேண்டும். முன்னேறுகின்ற சமுதாயங்கள் அனுபவங்கள் மூலம் பலன்பெற்று முன்னேறுகின்றன. சில நேரம் தங்களது அனுபவங்கள் மூலமும் சில நேரங்களில் மற்றவர்களின் அனுபவங்கள் மூலம் அவர்கள் பலன் பெறுகின்றனர்.

மேலும் ஒவ்வொரு நல்ல ஆலோசனையையும் ஒவ்வொரு நல்ல விஷயத்தையும் பின்பற்றி நடப்பதற்கு அந்த சமுதாயம் முயற்சி செய்கிறது. மேலும் இந்த விஷயத்தைத்தான் நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு கூறியுள்ளார்கள். ஒவ்வொரு நல்ல ஞானமிக்க விஷயமும் நம்பிக்கையாளரிடமிருந்து தொலைந்துபோன பொருளாகும். அது எங்கிருந்து கிடைத்தாலும் அதை அவர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். இதில்தான் ஆன்மீக மற்றும் பௌதீக முன்னேற்றத்திற்கான இரகசியம் பொதிந்துள்ளது.

கடந்த வருடம் நான் ஜெர்மனி வந்த சமயத்தில் இந்த நபிமொழியை பெர்லினின் லார்டு மேயர் அல்லது பெரிய மேயர் முன்னிலையில் நான் கூறினேன். இவர் மாநில கவர்னரின் அந்தஸ்த்தில் உள்ளவர். இதைக் கேட்டு விட்டு அவர் இதுவே உங்களது போதனையாகவும் உங்களது செயலாகவும் இருக்கின்றதென்றால், நீங்கள் மிக விரைவாக உலகை உங்களுடன் சேர்த்துக் கொள்வீர்கள் அல்லது உலகை வென்று விடுவீர்கள் என்று கூறினார். ஏறக்குறைய அவர் கூறிய வார்த்தைகளில் இந்தக் கருத்து தான் இருந்தது. இன்ஷா அல்லாஹ் இது நடக்கத்தான் போகிறது.

எவ்வாறிருப்பினும், நாம் முன்னேறுகின்ற சமுதாயமாக இருந்தால் – நிச்சயமாக நாம் முன்னேறுகின்ற சமுதாயம் தான். அவ்வாறிருக்கும் போது நமது பலவீனங்கள் மீது நாம் கண்களை மூடிக் கொண்டு இருந்துவிடக் கூடாது. மாறாக அவற்றின் மீது நமது பார்வை இருக்க வேண்டும். பிறகு உலகப் பார்வையுடன் மட்டும் நாம் பார்க்கக் கூடாது. நாம் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று நாம் வாதம் புரிகின்றோம். அவர்கள்தான் இந்த பூமியின் மேற்பரப்பில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது எல்லாரையும் விட மிக அதிகமாக பேரன்பு கொண்டிருந்தார்கள். அவர்கள் அல்லாஹ்வின் உரிமைகளை செலுத்துவதன் பக்கம் நமக்கு கவனமூட்டுவதற்காக வந்தார்கள். அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதன் பக்கம் நமக்கு கவனமூட்டுவதற்காக வந்தார்கள். நாம் ஒவ்வொரு விஷயத்தையும் தக்வாவில் நிலைபெற்றவாறு தக்வாவின் பார்வையுடன் பார்க்க

வேண்டும் என்பதையே இந்த எல்லா விஷயங்களும் நம்மிடம் எதிர்பார்க்கின்றது. அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தையும் பயத்தையும் நமது உள்ளங்களில் உருவாக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கைகளில் நாம் செய்த அந்த பைஅத் உடன்படிக்கையை நாம் நிறைவேற்ற வேண்டும்.

எனவே, இந்த விஷயங்களை முன்னால் வைத்தவாறு நாம் நமது எல்லாவிதமான பலவீனங்களையும் அகற்ற வேண்டும். மேலும் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். அமைப்பு ரீதியாக உள்ள பலவீனங்களை மட்டுமல்லாமல் நம்மிடமுள்ள சொந்த பலவீனங்களை அகற்றுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த சிந்தனையுடன் மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொருவரும் மாநாட்டில் கலந்து கொள்ளும் போதும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தனது சிந்தனையை தனது எண்ணங்களை உயர்வாக வைக்கும் போது, மாநாட்டு அமைப்பாளர்களும் இந்த விஷயத்தை முன்னால் வைத்தவாறு தங்களது ஏற்பாடுகளை செய்யும் போது அதன் மூலம் மாநாட்டின் அருள்களிலிருந்து மாநாட்டில் கலந்து கொள்பவர்களும் பணியில் இருப்பவர்களும் பலன்பெறுவார்கள். ஒட்டுமொத்தமாக ஜமாஅத்தின் பாதங்களும் முன்னேறிக்கொண்டே செல்லும் இன்ஷா அல்லாஹ்.

எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்! மாநாட்டின் நோக்கங்களை எடுத்துக் கூறியவாறு எங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவணக்கங்கள், தப்லீக், தக்வா மற்றும் இன்னும் பிற நோக்கங்களின் பக்கம் கவனமூட்டியுள்ளார்களோ அங்கு குறிப்பாக அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவது, படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது பற்றி குறிப்பாக மிகவும் அதிகமாக கூறியுள்ளார்கள்.

உண்மையில் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளும் உணர்வு மனிதனது உள்ளத்தில் உருவாகி விட்டால் இறை அடியார்களுக்குரிய உரிமையை நிறைவேற்றுவது தானாகவே ஏற்பட்டு விடும். இதன் பக்கம் ஒவ்வொரு அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாடு தொடர்பாக எப்போது பிரசுரங்கள் வெளியிட்டாலும் அறிவிப்பு செய்தாலும் இந்த அம்சத்தை அவர்கள் குறிப்பாக எடுத்துக் கூறியுள்ளார்கள். எங்கு அவர்கள் இறைவன் மீதுள்ள அச்சம், தக்வா, தூய்மை ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டியுள்ளார்களோ, அங்கு மென்மையான உள்ளத்துடன் பரிமாறுவது, ஒருவருக்கொருவர் அன்பு கொள்வது, சகோதரத்துவம், பணிவு, தாழ்வு ஆகியவற்றின் பக்கமும் அதே வேகத்துடன் கவனமூட்டியுள்ளார்கள்.

இறைவணக்கத்தை மேற்கொள்வது மட்டும் தக்வா அல்ல. ஜமாஅத்திற்கு தொண்டு செய்வது மட்டும் தக்வா ஆகாது. அல்லாஹ்வின் மீதும் ரஸூலின் மீதும் அன்பு வைத்திருப்பதை வெளிப்படுத்துவது மட்டும் தக்வா ஆகாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடனும் கிலாஃபத்துடனும் தொடர்பு வைத்து அவர்களுக்கு கட்டுப்பட்டு கீழ்படிந்து நடப்பது மட்டும் தக்வா ஆகாது. மாறாக, பெற்றோர்களுக்குரிய உரிமையை செலுத்தும்போதுதான் தக்வா முழுமையடையும். எப்போது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் உரிய உரிமைகள் செலுத்தப்படுமோ, எப்போது கணவர்களுக்குரிய உரிமைகள் செலுத்தப்படுமோ, எப்போது பிரியமான உறவினர்களுக்குரிய உரிமைகள் செலுத்தப்படுமோ, எப்போது நண்பர்களுக்குரிய உரிமைகள் செலுத்தப்படுமோ, எப்போது அண்டை வீட்டுக்காரர்களுக்குரிய உரிமைகள் செலுத்தப்படுமோ, எப்போது சகோதர சகோதரிகளுக்குரிய உரிமைகள் செலுத்தப்படுமோ, எப்போது ஜமாஅத்திலுள்ள நபர்களுக்குரிய உரிமைகள் செலுத்தப்படுமோ எதுவரையென்றால், எப்போது எதிரிகளுக்குரிய உரிமைகள் செலுத்தப்படுமோ அப்போதுதான் தக்வா முழுமை அடையும். இந்த எல்லா போதனைகளும் திருக்குர்ஆனில் இருக்கின்றது.

நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கான வழிவகையை செய்து கொள்வதற்காகவே நாம் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளோம். எங்கு மாநாட்டில் கலந்த கொள்பவர் தனது இறைவணக்கம், அல்லாஹ்வின் உரிமைகளை செலுத்துவது ஆகியவற்றின் பக்கம் தனது பார்வையை வைத்திருப்பாரோ அங்கு அவர் இறைவணக்கங்கள், தொழுகைகள், துஆக்கள், அல்லாஹ்வை நினைவுகூர்வது ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்துவாரோ அங்கு ஒருவருக்கொருவர் அன்பு கொள்வது, பரஸ்பரம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது, அனுதாபம் காட்டுவது ஆகியவற்றின் பக்கமும் கவனம் செலுத்தியவாறு தன்னை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அவ்வாறில்லை என்றால், மக்கள் ஒன்றுகூடுகின்ற ஓரிடத்திற்கு நீங்கள் வந்து விட்டீர்கள்.

உங்களுக்குப் பிரியமான உறவினர்களும் உங்களது இயல்பை ஒத்த மக்களும் இருக்கின்ற ஓரிடத்திற்கு நீங்கள் வந்து விட்டீர்கள். அறிவுப்பூர்வமான அல்லது தர்பிய்யத் விஷயங்கள் அடங்கியுள்ள சில சொற்பொழிவுகளைக் கேட்டு இன்பத்தை உணர்கின்ற ஓரிடத்திற்கு நீங்கள் வந்து விட்டீர்கள். அதிலிருந்தும் நீங்கள் இன்பத்தை சுவைத்தீர்கள். ஆனால், மாநாட்டிற்கான நோக்கத்தைப் பெற்றுக் கொண்டவர்களாக நீங்கள் ஆகமாட்டீர்கள். ஏனென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துவது, அதிலும் குறிப்பாக தனது சகோதரர்களிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்வது பற்றி அதிகமாக கவனமூட்டியுள்ளார்கள்.

மாநாட்டு அமைப்பாளர்கள் எனக்கு இதை தெரிவிக்க வேண்டும். சப்தத்தின் எதிரொலியை கேட்க முடிகின்றது. சப்தம் தெளிவாக மக்களுக்கு சென்று சேர்கின்றதா என்பதை பரிசோதித்துப் பார்த்து எனக்கு தெரிவிக்கவும்.

ஒரு சமயம் சில குழந்தைகளின் காரணமாகவும் ஜமாஅத்திலுள்ள ஒரு சாராரின் தவறான பரிமாற்றத்தின் காரணமாகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஆண்டு மாநாட்டை ஒத்தி வைத்தார்கள். அப்போது அவர்கள் கூறினார்கள்:

சில நபர்கள் ஜமாஅத்தில் இணைந்து இந்த எளியவனிடம் பைஅத் செய்து முழுமையான தவ்பாவிற்கான உடன்படிக்கையை என்னிடம் செய்து, அதற்குப் பிறகும் கோணலான உள்ளத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள் என்பது தெரிய வந்துள்ளது. தனது ஜமாஅத்திலுள்ள ஏழைகளை அவர்கள் ஓநாய்கள் போன்று பார்க்கின்றனர். தற்பெருமையின் காரணமாக நேரடியாக அவர்களது முகத்தைப் பார்த்து அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுவதற்குக் கூட அவர்களால் முடியவில்லை. அப்படியிருக்க நல்ல விதமாக பரிமாறி அவர்களுடன் இவர்கள் எவ்வாறு அனுதாபத்துடன் நடந்து கொள்ள முடியும்? நான் அவர்களை மிகவும் தாழ்ந்த நிலையிலும், சுயநலமிக்கவர்களாகவும் எந்த அளவு பார்க்கின்றேன் என்றால், அவர்கள் சின்னச் சின்ன சுயநல காரணங்களின் அடிப்படையில் சண்டை போடுகின்றனர். மற்றவர்களைப் பார்த்து கையை ஓங்குகின்றனர். அற்பமான விஷயங்களுக்காக ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் நடத்துகின்றனர். சில சமயங்களில் ஏசிப் பேசுவது வரை நிலைமை சென்று விடுகிறது. உள்ளங்களில் வெறுப்பை உருவாக்குகின்றனர்.

**மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் வியப்படைகின்றேன். இறைவா! இது என்ன நிலை? என்னுடன் இருக்கின்ற இந்த ஜமாஅத் யாருடையது? நஃப்ஸின் பேராசைகளின் காரணமாக இவர்களது உள்ளங்கள் ஏன் வீழ்ச்சி அடைந்து விட்டன? ஒரு சகோதரர் இன்னொரு சகோதரருக்கு தொல்லை கொடுத்தவாறு அவரை விட தான் உயர வேண்டும் என்று ஏன் விரும்புகின்றனர்?

தனது சுகத்தை விட இயன்ற வரையில் தனது சகோதரரின் சுகத்திற்கு முன்னுரிமை வழங்காத வரை மனிதனின் ஈமான் ஒருபோதும் சரியாக இருக்க முடியாது என்பதை உண்மையாகவே நான் உங்களுக்கு கூறிக் கொள்கின்றேன்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: எதுவரை இறைவன் தனது குறிப்பான அருளின் மூலமாக நமது ஜமாஅத்தில் உள்ள நபர்களிடம் மென்மையைக் கடைபிடிக்கும் தன்மை, அனுதாபத்துடன் நடந்து கொள்வது, சகிப்புத்தன்மை ஆகியவற்றை உருவாக்கமாட்டானோ அதுவரை இந்த மாநாட்டை நடத்துவது பொருத்தமானது என்று எனக்கு தோன்றவில்லை.

பாருங்கள்! ஜமாஅத்திலுள்ள நபர்களிடம் ஒருவருக்கொருவர் அன்பு, நேசம் கொள்வது, அனுதாபத்துடன் நடந்து கொள்வது, ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்வது போன்ற உணர்வுகள் இல்லாமல் இருந்த காரணத்தால் ஹஸரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எந்த அளவு துக்கத்தையும் துயரத்தையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள்? அதற்கு தண்டனை வழங்கும் விதமாக மாநாட்டை அவர்கள் ஒத்தி வைத்தார்கள்.

சில மக்கள் அமைப்பு ரீதியாக இருந்த குறைபாடுகள், வசதிக்குறைவு ஆகியவற்றின் காரணமாகத்தான் அவர்கள் மாநாட்டை நடத்தவில்லை என்று கருதுகின்றனர். ஆனால் இதற்கு பின்னால் அனுதாபத்துடன் நடந்து கொள்வதிலுள்ள குறைவு, சில நபர்கள் தமது சகோதரர்களிடம் வெளிப்படுத்திக் காட்டிய அகங்காரம் ஆகியவை இருந்தன. அவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை கடுமையான துன்பத்தில் ஆழ்த்தி விட்டன.

எனக்கு நினைவில் இருக்கின்றது. சில வருடங்களுக்கு முன் நான் இங்கு ஜெர்மனியில் ஒரு அவசர ஆலோசனைக் கூட்டத்திற்கான அழைப்பை விடுத்திருந்தேன். அதில் மாநாடு தொடர்பான விஷயங்கள் கூறப்பட்ட சமயத்தில் ஒரு நபர் பேசிய விஷயத்தின் மூலம் எனக்கு இந்த தாக்கம் ஏற்பட்டது. அதாவது அவருடைய எண்ணத்திற்கு ஏற்ப அல்லது மற்ற மக்களது எண்ணத்திற்கேற்பவும் மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது அல்லது ஒரு வருடம் மாநாடு நடைபெறாமல் இருந்தும் கூட வசதிக் குறைவின் காரணமாகத்தான் என்று கூறப்பட்டது. வசதிக்குறைவு அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட ஒரு விஷயமாகும். ஒருவர் மற்றவருக்காக அனுதாபம் காட்டுகின்ற உணர்வை கைக்கொள்ளாமல் இருந்ததன் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஏற்பட்ட துக்கம்தான் அசல் விஷயமாகும்.

எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். ஒருவர் மற்றவருக்காக அனுதாபம் காட்டும் உணர்வில்லாமல் இருப்பதும் ஒருவர் மற்றவருக்கு மதிப்பும் மரியாதையும் வழங்காமல் இருப்பதும் சாதாரண விஷயமல்ல. ஒவ்வொரு அஹ்மதியும் அவர் மற்றவரின் உரிமையை செலுத்தாமல் இருந்தால், எவரிடமும் அனுதாபம் காட்டுகின்ற உணர்வுடன் நடந்து கொள்ளாமல் இருந்தால் அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த சொற்றொடரை தன் கண் முன்னால் நிறுத்த வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் வியப்படைகின்றேன். இறைவா! இது என்ன நிலைமை? என்னுடன் இருக்கின்ற இந்த ஜமாஅத் யாருடையது?

நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த மாநாட்டின் நோக்கம் அல்லாஹ்விற்குரிய உரிமைகளை மட்டும் செலுத்துவது அல்ல. மாறாக, அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்காக உங்களிடம் தூய மாற்றத்தை உருவாக்க வேண்டும். இது அவசியமானதாகும்.

அவர்கள் மிகவும் துக்கத்துடன் கூறுகின்றார்கள்: அவர்கள் தொழுகின்றனர். ஆனால் தொழுகை என்றால் என்னவென்று அவர்களுக்கு தெரியாது. எதுவரை உள்ளம் பணிவின் சஜ்தாக்களை செய்யவில்லையோ அதுவரை வெளிப்படையான சஜ்தாக்களின் மீது நம்பிக்கை வைப்பது வீணான ஆசையாகவே இருக்கும். எனவே ஒருவர் தமது தொழுகையினால் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதால் மகிழ்ச்சி அடைந்துவிடக் கூடாது. ஒருவருக்கு குறிப்பாக ஒரு பதவி கிடைத்ததனால் அவர் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. எவரும் தான் செய்த பொருள் தியாகத்தினால் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. எதுவரை அவற்றில் தாழ்மை, பணிவு தங்களது சகோதரர்களுக்காக அனுதாபம் காட்டுவது ஆகியவை இல்லையோ அதுவரை அவர் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது.

எப்போது அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளுடன் ஒரு மனிதனிடம் அதாவது அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பான உணர்வுகளும் பொங்கி எழுமோ அப்போதுதான் அவர் உண்மையான தக்வாவை மேற்கொண்டு நடப்பவராவார். பிறகு உண்மையான தக்வாவை மேற்கொண்டு நடப்பவர்கள் ஏதாவதொரு நன்மையைச் செய்வதில் மட்டும் மகிழ்ச்சி அடையமாட்டார். அதில் அவர் பெருமை கொள்ளமாட்டார். மாறாக, அல்லாஹ்வின் மீதுள்ள அச்சமும் பயமும் அவரிடம் அதிகமாகிக் கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு நன்மையை செய்த பிறகும் இந்த நன்மையானது இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளதா? இல்லையா? என்பது எனக்கு தெரியவில்லையே என்ற கவலைதான் அவரை பற்றிக் கொள்ளும். எனவே, உண்மையான நன்மைகள் தக்வாவை உருவாக்குபவையாக இருக்கும். தக்வா மனிதனிடம் பணிவையும் தாழ்மையையும் உருவாக்கும். இந்த விஷயத்தை நம்மிடம் உருவாக்குவதற்கு இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்துள்ளார்கள்.

மற்றவர்களுக்காக அனுதாபம் காட்டும் உணர்வுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை நீங்கள் இந்த விஷயம் மூலமாக கணிக்க முடியும். அதாவது, ஒரு அஹ்மதிக்கு அவர் உண்மையான முஸ்லிம் என்று தன்னைக் கூறிக் கொள்வதற்கு பைஅத் நிபந்தனைகள் ஒரு அடிப்படை விஷயமாகும்.

இதன் நான்காவது நிபந்தனையாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பொதுவாக அல்லாஹ்வின் எல்லா படைப்பினங்களுக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கும் தனது மனயிச்சையின் காரணமாக நாவினாலோ, கைகளினாலோ அல்லது வேறு எந்த வகையிலோ தகாத முறையில் எவ்வித துன்பமும் இழைக்க மாட்டேன்.

எனவே, ஓர் அஹ்மதி முஸ்லிமிடமிருந்து ஓர் முஸ்லிம் மட்டுமின்றி ஒவ்வொரு முஸ்லிமும் எல்லா விதமான தகாத முறையில் இழைக்கப்படும் துன்பங்களிலிருந்தும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். முஸ்லிம்கள் மட்டுமின்றி அல்லாஹ்வின் அனைத்து படைப்பினங்களும் துன்பங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். சில மக்கள் உள்ளனர். அவர்கள் யாருக்கும் துன்பம் கொடுக்கமாட்டார்கள். தங்களது பணிகளை மட்டும் செய்வார்கள். பிறருக்கு துன்பமிழைக்கின்ற அந்த தீமையிலிருந்தும் அவர்கள் தூய்மை அடைந்தவர்களாக இருப்பார்கள். அதன் காரணமாக அவர்கள் நன்மையின் மிக உயர்வான தரத்தை அடைந்து விட்டனர் என்று எவரும் கருத வேண்டாம். நம்பிக்கையாளரின் ஒவ்வொரு அடியும் முன்னேறிச் சென்று கொண்டேயிருக்கும். அவ்வாறில்லை என்றால் தக்வாவிலும் ஈமானிலும் முன்னேற்றம் ஏற்பட முடியாது.

எனவேதான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் நிபந்தனைகளில் ஒன்பதாவது நிபந்தனையாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

பொதுவாக அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் கருணையுடன் நடந்து கொள்வதில் முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக ஈடுபடுவேன். எனது சக்திக்கேற்ப அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ள ஆற்றல்கள், அருட்கொடைகள் ஆகியவற்றின் மூலம் மனித இனத்திற்கு பயனளிக்கக்கூடியவனாக இருப்பேன்.

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது நோக்கமாக இருக்கும்போதுதான் உண்மையான நன்மையை செய்ய முடியும். அவனது திருப்தியைப் பெறுவதற்காக தனது எல்லா ஆற்றல்களையும், திறமைகளையும் அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் கருணையுடன் நடந்து கொள்வதற்காக ஒரு நபர் பயன்படுத்துகின்றார். அல்லாஹ்வின் படைப்பினங்களில் எல்லாரையும் விட சிறந்தவனாக மனிதன் இருக்கின்றான். அவன் படைப்பினங்களிலேயே சிறந்த படைப்பினமாக இருக்கின்றான். எனவே, அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனம் ஏற்படும் போதுதான் ஒருவர் உண்மையான மனிதராக ஆகின்றார். மற்றவர்களுக்கு பயன்களைத் தருவதன் பக்கம் அவர் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு முன்னரும் நான் பலமுறை இதைக் கூறியுள்ளேன். முஸ்லிமல்லாத மற்றவர்களிடம் உரிமைகள் தொடர்பாக நான் பேசுகின்றபோது இஸ்லாத்தின் இந்த சிறப்புத்தன்மையை அவர்களுக்கு முன்னால் நான் வைத்துள்ளேன். உலக அமைப்புகள் சில உரிமைகளை நிர்ணயம் செய்து இவை எங்களது உரிமையாகும். இதனை எங்களுக்கு வழங்குங்கள் என்று கூறுகிறது. அவ்வாறு தரவில்லையென்றால் நாங்கள் எங்களது சக்தியை உபயோகிப்போம் என்று அது கூறுகிறது. ஆனால், இஸ்லாம் என்ன கூறுகின்றது? என்றால் நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்று விரும்பினால் உங்களில் ஒருவர் மற்றவருக்கு உரிய உரிமையை செலுத்த வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் அந்த உரிமைகள் பற்றி கூறியுள்ளான். அதை ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு செலுத்த வேண்டும். இதுதான் உலக அமைப்புக்கும் இறைவனால் உருவாக்கப்பட்ட அமைப்புக்கும் இடையிலுள்ள வித்தியாசமாகும். உலக அமைப்புகள் பெரும்பாலும் உரிமைகளைக் கேட்டு பெறுகின்ற விஷயங்களைப் பற்றி பேசுகின்றது. இதற்காக சில நேரங்களில் தகாத வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இறைவன் நம்பிக்கையாளர்களிடம் நீங்கள் உண்மையான நம்பிக்கையாளர்களாக இருந்தால், எனது திருப்தியை வேண்டுபவர்களாக இருந்தால் பிறருக்குள்ள உரிமைகளை செலுத்துங்கள். இந்த நோக்கத்தை மனதில் வைத்தவாறு, உரிமைகளை கேட்டால் வழங்குவோம் என்றில்லாமல் பிறருக்குரிய உரிமைகளை நீங்களே வழங்குங்கள். நீதியை நிலைநாட்டியவாறு இந்த உரிமையை வழங்குங்கள். மனிதர்களிடம் அனுதாபத்துடன் நடந்துகொள்ளும் உணர்வுடன் இந்த உரிமைகளை வழங்குங்கள் என்று இறைவன் கூறுகின்றான்.

இந்த அனுதாப உணர்வு அஹ்மதிகளிடம் உருவாகி விட்டால், இதை கண்முன் நிறுத்தியவாறு அவர்களில் ஒருவர் மற்றவரது உரிமைகளை செலுத்த முயற்சி செய்தால் ஜமாஅத்தில் சண்டைகள், பிரச்சனைகள் ஆகியவை ஏற்படுவது பற்றிய கேள்வியே எழாது. ஜமாஅத் அமைப்புக்கு முன்னால் இதனால் பிரச்சனைகள் உருவாக்காது. இப்படிப்பட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், குறைந்தபட்சம் ஒரு மாதத்தில் நூற்றுக்கணக்கான இப்படிப்பட்ட விஷயங்கள் அடங்கியுள்ள கடிதங்களைப் படிப்பது, அதற்கு பதில் எழுதுவது அல்லது அவற்றை சம்பந்தப்பட்ட துறைக்கு மார்க் செய்து அனுப்புவது ஆகியவற்றிற்காக காலத்தின் கலீஃபா செலவிடும் நேரம் வேறு ஏதாவது வளர்ச்சிப் பணிகளுக்காக செலவாகியிருக்கும். அது ஜமாஅத்திற்கு பலனளிக்கக்கூடியதாக இருக்கும். காலத்தின் கலீஃபாவிடம் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரும்போது எந்நிலையிலும் அவர் அந்த பிரச்சனைகளை பார்த்தே ஆக வேண்டும். அமைப்பை சிறந்த முறையில் உருவாக்குவதற்காக அதை பார்க்க வேண்டும். சீர்திருத்தத்திற்காகவும் அவற்றை பார்க்க வேண்டும். அனுதாப உணர்வின் அடிப்படையிலும் அதைப் பார்க்க வேண்டும். எங்காவது ஓர் அஹ்மதி சுயநலத்தில் வீழ்ந்து தனது உரிமைகள் தொடர்பாக கவலையடைந்து அதற்காக மற்றவர்களது உரிமைகளைப் பறித்து அதனால் சோதனையில் ஆழ்ந்து விடக்கூடாதே என்பதற்காக அதைப் பார்க்க வேண்டும். அதன் காரணமாக அவர் அல்லாஹ்வின் வெறுப்பிற்கு ஆளாகி விடக் கூடாது அல்லது அவர் எவ்வித அநீதிக்கும், கொடுமைக்கும் ஆளாகி அநீதியிழைக்கப்பட்டவராக ஆகிவிடவும் கூடாது. சில நேரங்களில் இப்படிப்பட்ட விஷயங்களும் வருகின்றன. ஜமாஅத் வழங்கும் தீர்ப்புகளை மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. காலத்தின் கலீஃபாவின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதில்லை. ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களுக்கு விஷயத்தைப் புரிய வைக்கும் போது அவர்களுக்கு அதில் திருப்தி ஏற்படுவதில்லை. பிடிவாத குணத்தை அவர்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். பிறகு அவர்களுக்கு கடுமையாக பதிலும் கூற வேண்டியது வருகிறது. பிறகு சில நேரங்களில் அப்படிப்பட்டவர்களுக்கு நான் இவ்வாறு பதில் கூறுகின்றேன். நல்லது! நீங்கள் இந்த தீர்ப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்றால் பிறகு ஜமாஅத்தும் உங்களது பிரச்சனைகளுடன் எவ்வித தொடர்பும் வைக்காது அல்லது சில நேரங்களில் கடுமையாகவும் நடந்து கொள்ளப்படுகிறது. தண்டனையும் வழங்கப்படுகிறது.

ஆனால், அனுதாப உணர்வானது அப்படிப்பட்ட மக்களுக்காக துஆ செய்வதற்காக நம்மை வற்புறுத்துகின்றது. அல்லாஹ் இவர்களுக்கு ஹிதாயத்தை வழங்க வேண்டும். உலகப் பிரச்சனைகளுக்காக மார்க்கத்தை முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டு இவர்கள் தங்கள் மறுமையை பாழாக்கி விடக்கூடாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தகாத வழிகளில் எவ்வித துன்பமும் தரமாட்டேன் என்று கூறியதன் பொருளும் இதுதான். சில நேரங்களில் சில பிரச்சனைகளின் காரணமாக மற்றவர்களுக்கு துன்பம் ஏற்படலாம். அது ஆகுமானதாகும். அதன் பொருள் என்னவென்றால், தெரிந்து கொண்டே வேண்டுமென்றே எவருக்கும் எவ்வித துன்பத்தையும் தரக்கூடாது. இதுதான் ஒரு நம்பிக்கையாளரின் மகிமையாகும். தெரிந்து கொண்டே வேண்டுமென்றே பிறருக்கு துன்பம் தருவதற்கு காரணகர்த்தாவாக இருக்கக் கூடாது. மறுபுறம் சில நேரங்களில் வேறு வழியில்லாமல் வலுக்கட்டாயமாக சில நடவடிக்கைகளை ஜமாஅத் அல்லது காலத்தின் கலீஃபா மேற்கொள்ள வேண்டியது வருகிறது. அது மற்றவர்களது துன்பத்திற்கு காரணமாக இருக்கும். ஆனால், இந்த துன்பம் சீர்திருத்தத்திற்காக உள்ளதாகும். சீர்திருத்தத்திற்காகவே இந்த துன்பம் அவருக்கு தரப்படுகிறது. மேலும் இது தகாத செயலல்ல. ஆனால் இந்த நிலையிலும் கூட அனுதாப உணர்வின் அடிப்படையில் எவருக்கு இப்படிப்பட்ட தண்டனை அல்லது துன்பம் ஆகியவற்றை சந்திக்க வேண்டியது வருகின்றதோ அவருக்காக கண்டிப்பாக துஆ செய்ய வேண்டும். எல்லாரையும் விட அதிகமாக காலத்தின் கலீஃபாவுக்கு இப்படிப்பட்ட நிலைமைகளைக் கடந்து செல்ல வேண்டியது வருகின்றது. என்னால் எவருக்கும் துன்பம் ஏற்படவில்லையே என்று அவர் பார்க்கின்றார். எந்த அளவு அல்லாஹ் எனக்கு ஆற்றல்களை வழங்கியுள்ளானோ அதை பயன்படுத்தியவாறு எங்காவது எவருடனாவது அநீதியாக நடந்து கொள்வதற்கு காரணகர்த்தாவாக ஆகியிருக்கின்றேனோ? எனது ஏதாவது ஒரு செயலின் காரணமாக தகாத முறையில் எந்த வீட்டிலாவது அமைதி சீர்குலைந்து போயிருக்கின்றதா? என்று அவர் பார்க்கின்றார். இது மட்டுமல்ல. அனுதாப உணர்வை வெளிப்படுத்தும் வகையில் அவர் சில வழிமுறைகளையும் மேற்கொள்கின்றார். அதன் மூலம் அந்த நபரின் சிறந்த நிலைக்கான ஏற்பாட்டை அவர் செய்கின்றார். அவரது சீர்திருத்தம் இதனால் ஏற்பட முடியும். இப்படிப்பட்ட நீதி மற்றும் அனுதாபம் காட்டுதல் ஆகியவற்றின் எதிர்பார்ப்புகளை காலத்தின் கலீஃபா நிறைவேற்ற வேண்டியதுள்ளது.

மேலும் வெளிப்படையான காரணிகளை முன்னால் வைத்தவாறு இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது காலத்தின் கலீஃபாவின் பணியாகும். பிறகு கலீஃபாவால் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பொறுப்பாளர்கள், ஜமாஅத் அமைப்பு ஆகியோர் நீதியுடனும், அனுதாப உணர்வுடனும் தங்களது பணிகளை நிறைவேற்ற வேண்டும். எவர்கள் அவ்வாறு செய்வதில்லையோ, தெரிந்து கொண்டே தனது பொறுப்பிற்குரிய உரிமையை செலுத்துவதில்லையோ அவர் அவரிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட விஷயங்களில் நம்பிக்கை துரோகம் செய்பவராவார். நிச்சயமாக அவர்கள் இறைவன் முன்னிலையில் கேள்வி கேட்கப்படுவார்கள். எனவே, பொறுப்பாளர்களுக்கும் இது மிகவும் அச்சப்பட வேண்டிய இடமாகும். ஜமாஅத் பொறுப்பு உலக நோக்கங்களைப் பெறுவதற்காக தரப்பட்டதல்ல. மாறாக நாம் இந்த தகுதியை பெற்றதனால் முன்பை விட அதிகமாக ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். அவர்களோடு அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களது சிறந்த நிலைமைக்காக வழியைத் தேட வேண்டும். அவர்களை தம்முடன் சேர்த்துக் கொண்டு அவர்கள் செல்ல வேண்டும். அதன் மூலமாக ஜமாஅத்தின் வலுவான தொடர்பு நிலைநிற்க வேண்டும். அதன் மூலம் ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் உள்ள வேகம் மேலும் அதிகமாக வேண்டும். இப்படிப்பட்ட அனுதாப உணர்வு ஒவ்வொரு பொறுப்பாளரிடமும் உருவாக வேண்டும். இந்த உணர்வு ஜமாஅத்தின் ஒவ்வொரு பணியாளர்களிடமும் உருவாக வேண்டும். பொறுப்பாளர்களின் முன்மாதிரி இவ்விஷயத்தில் நிலைநாட்டப்படும்போதுதான் பொறுப்பாளர்கள் தங்களது பொறுப்புகளுக்குரிய உரிமையை செலுத்தியவர்களாக ஆக முடியும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சமுதாயத்தின் தொண்டராக இருப்பது அதன் தலைவராக ஆகுவதற்குள்ள அடையாளமாகும். அதாவது சமுதாயத்தின் தொண்டராக ஆனால்தான் அல்லாஹ்வின் புறமிருந்து கண்ணியமும், தலைமையும் கிடைக்கும். இது அல்லாஹ்விடமிருந்து தான் கிடைக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள். சமுதாயத்தின் தலைவர் அந்த சமுதாயத்தின் தொண்டராக இருக்கின்றார்.

அவ்வாறு இருக்கவும் வேண்டும். நபிமொழிகளைப் படிப்பது, அதனை பிறருக்கு படித்துக் காட்டுவது ஆகியவை மூலமாகவும் அதற்கேற்ப செயல்படுவதற்கு முழுமையாக முயற்சியும் செய்யும் போதுதான் பலன் கிடைக்கும். பொறுப்பாளர்கள் தங்களது நல்லொழுக்கத்தை மிகவும் உயர்ந்த நிலையில் வைத்திருக்க வேண்டும். மக்கள் பல விஷயங்களையும் பேசுவார்கள். துன்பங்களை தருவார்கள். ஆனால் தைரியத்துடன் செயல்படுவது ஒரு பொறுப்பாளரின் பணியாகும். ஒருபோதும் இப்படிப்பட்ட நபருக்காக உங்களது அனுதாப உணர்வை மரணிப்பதற்கு நீங்கள் விட்டு விடாதீர்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

கோபத்தை விழுங்குவதும் கசப்பான வார்த்தைகளை சகித்துக் கொள்வதும் மிகப்பெரும் வீரமிக்க நபரின் செயலாகும்.

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றின் விளக்கமேயாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மற்றவரை சண்டையிட்டு வீழ்த்துபவர் பயில்வான் அல்ல. கோபம் ஏற்படுகின்ற போது தனது கோபத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவரே பயில்வான் ஆவார்.

கோபம் தனது கட்டுபபாட்டின் கீழ் இருந்தால்தான் அவரால் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும். அப்போதுதான் அனுதாப உணர்வுடன் தீர்ப்புகள் வழங்கப்படும். இந்த அளவுகோலை தங்களிடம் ஏற்படுத்த பொறுப்பாளர்கள் முயற்சி செய்ய வேண்டும். நான் கூறுகின்ற இந்த விஷயங்கள் ஜெர்மனியிலுள்ள பொறுப்பாளர்களுக்காக மட்டும் கூறப்பட்டதல்ல. மாறாக, உலகிலுள்ள எல்லா ஜமாஅத் பொறுப்பாளர்களையும் நோக்கியே இவற்றை நான் கூறுகின்றேன். இங்கிலாந்து, பாகிஸ்தான், இந்தியா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலுள்ள

பொறுப்பாளர்களிடமும் இவற்றை நான் கூறுகின்றேன். இவ்வாறு நான் விளக்கிக் கூறுவதன் காரணம் எங்கு குத்பா கொடுக்கப்படுகின்றதோ அங்குள்ள மக்களின் நிலைதான் இவ்வாறானது என்று மக்கள் கருதுகின்றனர். எவ்வாறு பொதுவான குத்பா உரைகள் ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரையும் நோக்கி நிகழ்த்தப்படுகிறதோ அவ்வாறே ஏதாவதொரு குறிப்பிட்ட துறையில் உள்ளவர்கள் பற்றி நான் பேசும் போது உலகில் அவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் அனைவருக்காகவுமே நான் இவற்றை கூறுகின்றேன்.

ஏனென்றால், இப்போது இறைவன் M.T.A. மூலமாக காலத்தின் கலீஃபாவுக்கு தனது விஷயத்தை எடுத்துக் கூறுவதற்கு எளிதான வழியை தந்துள்ளான். இந்த வசதியை அவன் ஏற்படுத்தித் தந்துள்ளான். எனவே, பல்வேறு இடங்களில் பல்வேறு விஷயங்கள் பேசப்படும். அவை உலகிலுள்ள எல்லா ஜமாஅத்துகளுக்கும் கூறப்பட்டவையாகும். ஆம்! நிச்சயமாக இது இந்த நாட்டின் நற்பாக்கியமாகும். நான் ஜெர்மனியில் இதை கூறுகின்றேன் என்றால் இது ஜெர்மனியில் உள்ளவர்களின் நற்பாக்கியமாகும். என் முன்னால் அமர்ந்து நேரடியாக நான் கூறுபவற்றை கேட்கின்ற மக்களின் நற்பாக்கியமாக இது இருக்கின்றது. அவர்கள் இந்த விஷயங்கள் முதலில் தங்களுக்கு கூறப்பட்டுள்ளன என்று கருத வேண்டும்.

ஆனால், எப்போதும் நினைவில் வையுங்கள். எந்த பைஅத்தின் நிபந்தனைகளை நான் படித்தேனோ அது எந்த குறிப்பிட்ட பிரிவினர்களுக்காக உரியதல்ல அல்லது குறிப்பிட்ட மக்களுக்கு மட்டும் உரியதல்ல. மாறாக ஒவ்வொரு அஹ்மதிக்கும் இது கூறப்பட்டிருக்கின்றது. ஜமாஅத் அமைப்புடன், தான் இணைந்திருப்பதாகக் கருதுகின்ற ஒவ்வொரு நபருக்கும் இது கூறப்பட்டிருக்கின்றது.

நான் விளக்கிக் கூறுவதற்காக பொறுப்பாளர்கள் தொடர்பாக கூறினேன். ஏனென்றால், ஜமாஅத்தின் முன்பு அவர்கள் முன்மாதிரியாகத் திகழ வேண்டும். எனவே மற்றவர்களை விட அதிகமாக அவர்கள் தங்களது நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே, ஓர் எல்லைக்குட்பட்ட கட்டளையோ நிபந்தனையோ அல்ல. ஜமாஅத்திலுள்ள எல்லா நபர்களுக்கும் இது அவசியமானதாகும். எனவே, எப்போதும் இந்த பைஅத் நிபந்தனைகளிலுள்ள சொற்களை சிந்தித்தவாறு அதைப் பேணி நடக்க முயற்சி செய்ய வேண்டும். இதற்குரிய அளவுகோல் என்ன? இதை நான் மேலும் விளக்கிக் கூறுகின்றேன். நான் இப்போது கூறியதுபோன்று பைஅத்தின் நான்காவது நிபந்தனையில் ஒருபோதும் எவருக்கும் தனது நாவாலோ கைகளாலோ துன்பம் தரக்கூடாது என்பதை ஓர் அஹ்மதிக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அவசியமானதாக ஆக்கியுள்ளார்கள். தக்வாவின் வழிகளில் செல்லும்போது தான் இந்த தரத்தை மனிதன் பெற முடியும். உள்ளம் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தாலும் பயத்தாலும் நிறைந்திருக்க வேண்டும்.

ஒரு நபிமொழியில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

உங்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது பொறாமை கொள்ளாதீர்கள். ஒருவர் மற்றவருடன் சண்டையிட வேண்டாம். ஒருவர் மற்றவர் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ள வேண்டாம். ஒருவர் மற்றவர் மீது பகைமை கொள்ள வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றவரின் வியாபாரத்தின் மீது வியாபாரம் செய்ய வேண்டாம்.

அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக ஆகி விடுங்கள். ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் சகோதரர் ஆவார். அவர் தனது சகோதரர் மீது அநீதியிழைக்கமாட்டார். அவரை இழிவுபடுத்த மாட்டார். அவரை அற்பமாக கருதமாட்டார். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மூன்று முறை தனது இதயத்தைச் சுட்டிக்காட்டியவாறு தக்வா இங்கிருக்கின்றது; தக்வா இங்கிருக்கின்றது; தக்வா இங்கிருக்கின்றது என்று கூறினார்கள்.

பிறகு கூறினார்கள்: தனது முஸ்லிம் சகோதரரை அற்பமாக கருதுவதே ஒரு மனிதரின் தீமைக்கு போதுமானதாக இருக்கின்றது. ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் மற்ற முஸ்லிமின் இரத்தம், செல்வம், கண்ணியம் ஆகியவை ஹராமாகும்.

இன்று நீங்கள் உலகின் மீது உங்கள் பார்வையை செலுத்துங்கள். எப்படிப்பட்ட அநீதிகள் இழைக்கப்படுகின்றதோ, உரிமைகள் பறிக்கப்படுகின்றதோ முஸ்லிம்கள் முஸ்லிம்களின் கழுத்துக்களை வெட்டுகின்றார்களோ, எல்லா பக்கமும் எத்தகைய அநீதியையும் காட்டுமிராண்டித்தனத்தையும் நாம் பார்க்க முடிகின்றதோ அவற்றிற்கான அடிப்படைக் காரணம் இந்த பொறாமையேயாகும். மேலும் தக்வாவிலுள்ள குறைவே ஆகும்.

நாம் இந்தக் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டது நமது நற்பாக்கியமாகும். நாம் இந்த தீவிரவாதத்திலிருந்தும் தப்பி விட்டோம். சிறிய அளவில் நமது வீடுகளிலும் நமது சுற்றுச்சூழலிலும் நபிமொழிகளில் கூறப்பட்டுள்ள இந்த நோய்கள் இருக்கின்றன. நம்மில் ஒவ்வொருவரும் உண்மையை விரும்பியவர்களாக நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியவாறு ஆய்வு செய்து பார்த்தால் நான் உங்களுக்கு எந்த தவறான விஷயத்தையும் கூறவில்லை என்பது தானாகவே உங்களுக்கு தெரிய வரும்.

சகோதரர்களுக்கிடையில் பொறாமையின் அடிப்படையில் மனவருத்தம் இருந்து வருகிறது. ஜமாஅத் சகோதரர்களுக்கிடையே பொறாமையின் அடிப்படையில் மனத்தாங்கல் இருந்து வருகிறது. பெண்களுக்கிடையே பொறாமையின் அடிப்படையில் மனத்தாங்கல் இருந்து வருகிறது. இவரிடம் இந்தத் தொண்டு ஏன் ஒப்படைக்கப்பட்டுள்ளது? அது என்னிடம் ஏன் ஒப்படைக்கப்படவில்லை? என்ற விஷயத்தில் பொறாமை ஆரம்பமாகி விடுகிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத் இறைவனது ஜமாஅத் ஆகும் என்பதில் நம்மில் ஒவ்வொருவருக்கும் உறுதி இருக்கின்றதென்றால் – நிச்சயமாக அப்படிப்பட்ட உறுதி நம்மிடம் இருக்கின்றது. இத்தகைய உறுதி இருக்கின்றதென்றால், பிறகு பொறுப்பிற்காக ஆசைப்படுவதற்குப் பதிலாக இஸ்திஃபாரின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏதாவது ஒரு சமயத்தில் என்னிடம் இந்தத் தொண்டு ஒப்படைக்கப்பட்டால் நான் இதை சிறந்த முறையில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். பதவி கிடைக்க வேண்டும் என்று விரும்புபவர் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருக்கு அந்த பொறுப்பையே கொடுக்கக் கூடாது என்று கூறியுள்ளார்கள்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை நீங்கள் பாதுகாக்க வேண்டும். இது தொடர்பாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

பொறுப்புகளும், ஜமாஅத் தொண்டுகளும் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள அமானத்துகளாகும். மனிதனுடைய உள்ளத்தில் தக்வா இருந்தால் அவன் மிகவும் பயப்படுவான். எந்தத் தொண்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதற்குரிய உரிமையை செலுத்தாதன் காரணமாக என்னிடம் கேள்வி கேட்கப்படும். எந்த அடியானின் முன்னாலும் இந்த கேள்வி கேட்கப்படமாட்டாது. அந்த அடியானை வாய் பேச்சின் மூலமாக ஏமாற்றி விடலாம். மாறாக, மறைவான செய்திகளை அறிந்துள்ள எல்லாவற்றையும் பற்றி நன்கு அறிந்துள்ள அந்த இறைவனுக்கு நாம் பதில் கூற வேண்டியது வரும். அவனிடம் எந்த விஷயமும் மறைவாக இல்லை. அவனை யாரும் ஏமாற்ற முடியாது என்ற பயம் இருக்க வேண்டும்.

இந்த விஷயத்தை ஒவ்வொரு பொறுப்பாளரம் தங்கள் கண்முன் நிறுத்தி செயல்பட்டால், பொறுப்பாளர்களாக ஆசைப்படுபவர்களும் இதை தங்கள் கண்முன் நிறுத்தி செயல்பட்டால், சுய விருப்பங்களுக்குப் பதிலாக தக்வாவின் பக்கம் அவர்கள் முன்னேறிச் செல்வார்கள். தக்வாவிலுள்ள குறைவுதான் சாதாரண விஷயங்களில் பகைமையை வளர்ச்சியடையச் செய்கிறது. பிறகு ஒரு நேரம் வருகின்றது. அப்போது எத்தகைய நிலைமை உருவாகி விடுகின்றது என்றால், இவருக்கு எப்படி துன்பம் தரலாம்? இவரை ஜமாஅத் அமைப்பு மற்றும் காலத்தின் கலீஃபா முன்னிலையில் எப்படி மிகவும் இழிவிற்குரிய நபர் என்று நிரூபிக்க முடியும்? அல்லது எப்படி அவரை தாழ்ந்த நிலையில் உள்ளவராகக் காட்ட முடியும்? அல்லது எப்படி அவருடைய ஏதாவதொரு பலவீனத்தை அவர்களுக்கு முன்னால் கொண்டு வர முடியும்? என்பதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றது.

எதுவரையென்றால் சபைகளில் இந்த நபரது மனைவி மக்களை எப்படி இழிவுபடுத்துவதற்கு முயற்சி செய்யலாம்? என்று திட்டம் தீட்டப்படுகின்றது. சில நேரங்களில் முழு குடும்பமும் இதில் ஈடுபடுகின்றது. ஒருபுறம் எவருக்கும் துன்பம் தரமாட்டேன் என்று மட்டுமல்லாமல் அவருடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதற்கான வழிகளை தேடுவேன். அவருக்கு பயன்தரும் வகையிலுள்ள விஷயங்களை சிந்திப்பேன் என்ற நிபந்தனையில் பைஅத் செய்கின்றனர். மறுபுறம் இத்தகைய செயல் உள்ளது.

எனவே இந்த தரத்தைப் பெறுவதற்கு உங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த நாட்களில் நீங்கள் உங்களை இவ்விஷயத்தில் ஆய்வு செய்து பாருங்கள். அல்லாஹ் உங்களுக்கு இந்த நாட்களை உங்களது சீர்திருத்தத்திற்காக ஏற்படுத்தித் தந்துள்ளான். இந்த எல்லா விஷயங்களையும் ஏதாவதொரு கற்பனையின் அடிப்படையில் நான் கூறவில்லை. மாறாக, உண்மையிலேயே இப்படிப்பட்ட பிரச்சனைகள் என் முன்னால் வந்திருக்கின்றது. அது எனது கவலைக்குக் காரணமாக இருக்கின்றது. அவை மிகவும் வெட்கப்படுவதற்குக் காரணமாக இருக்கின்றன. அஹ்மதிய்யா ஜமாஅத் எப்படிப்பட்ட ஜமாஅத் என்றால் அது உலகிற்கு உரிமைகளை வழங்குவதற்குரிய வழிகளைத் தேடுகின்றது என்று நான் உலகத்திலுள்ளவர்களிடம் கூறுகின்றேன். இந்த ஜமாஅத் அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டுள்ளது. அவர்கள் தக்வாவின் இந்த நுட்பமான வழிகளில் நம்மை வழிநடத்துவதற்காக இந்தக் காலத்தில் இறைவன் புறமிருந்து தோன்றியுள்ளார் என்று நான் கூறுகின்றேன். ஆனால் நமது சில சகோதரர்களின் நிலை எவ்வாறு உள்ளது? இதை மற்றவர்கள் பார்த்து என்ன கூறுவார்கள்? உங்களது வாதம் என்ன? உங்களது மக்களின் செயல் எப்படி இருக்கின்றது? என்று அவர்கள் கேட்பார்கள்.

எனவே, உலகில் புரட்சி ஏற்படுவதற்குரிய வழியாக நாம் ஆகவேண்டும் என்றால் நமது வாழ்நாளிலும் நமது நிலைமைகளிலும் எப்படிப்பட்ட புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றால் அதுபற்றி காலத்தின் இமாம் இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் ஒளியில் அதை நம்மிடம் எதிர்பார்க்கின்றார்கள்.

பிறகு இந்த நபிமொழியில் பெருமானார் (ஸல்) அவர்கள் வழங்கியுள்ள ஒரு அறிவுரையைக் கூறுகின்றேன். மற்றவற்றை விட்டு விடுகிறேன். ஒருவருக்கும் மற்றவருக்கும் இடையில் நடைபெறும் வியாபாரத்தின் மீது நீங்கள் வியாபாரம் செய்யாதீர்கள் என்பதாகும். வியாபாரத்தை பாழாக்குவதற்காக தனது உள்ளத்திலுள்ள காழ்ப்புணர்ச்சியையும் வெறுப்பையும் வெளிப்படுத்திக் காட்டுவதற்காக வியாபாரத்தை சீர்குலைக்க முயற்சி செய்யாதீர்கள். தனக்குள்ள சிறந்த வசதிகள், வழிமுறைகள் ஆகியவற்றின் காரணமாக வியாபாரத்தை சீர்குலைக்கும் எண்ணத்தில் ஏதாவதொரு பொருளுக்கு அதிக விலையை நிர்ணயம் செய்வது என்பது மட்டும் இந்த ஹதீஸின் பொருள் அல்ல. மாறாக இந்த கட்டளை மிகவும் விரிவானதாகும்.

உதாரணமாக, சில சந்தர்ப்பங்களில் இதை நாம் பார்க்கின்றோம். ஒருவர் ஓரிடத்தில் திருமணத்திற்காக வரன் பேசி முடிவு செய்துள்ளார். அவர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போதே இன்னொரு பிரிவினர் இன்னொரு வரனை அவரிடம் கொண்டு செல்கின்றனர். ஒருவருக்கு இதுபற்றி தெரிந்திருந்தால் ஒரு வரன் பேசப்படும் நிலையில் எந்த அஹ்மதியும் இன்னொரு வரனை அங்கு அனுப்பக் கூடாது. மாப்பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் இத்தகைய வரனை கொண்டு செல்லக் கூடாது. பையனுக்கும் பெண்ணுக்கும் இடையில் திருமணத்திற்கான பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும் போது அவர்களும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் முதலில் அவர்களிடம் வந்த வரன் தொடர்பாக துஆ செய்து முடிவு எடுக்க வேண்டும். அதற்குப் பிறகு வருகின்ற வரன் பற்றி சிந்திக்கவே கூடாது. துஆவிற்குப் பிறகு முதலில் வந்த வரன் தொடர்பாக உள்ளத்திற்கு திருப்தி ஏற்படவில்லையென்றால் மற்ற வரனைப் பற்றி யோசிக்கலாம்.

பிறகு சில நேரங்களில் இப்படிப்பட்ட நிலையும் உருவாகின்றது. ஒரு பையன் தரப்பிலிருந்த ஒரு பெண்ணை கேட்கின்றார்கள். அந்த பையனிடம் அல்லது அந்த பெண்ணிடம் ஒரு மூன்றாம் நபருக்கு பகைமை இருக்கும். அவர் அந்தப் பெண் வீட்டாரிடம் சென்று இந்தப் பையனிடம் இன்னின்ன குறைகள் உள்ளன. எனவே, இதை வித சிறந்த வரனை நான் உங்களுக்கு சொல்கின்றேன். இந்த வரனை மறுத்து விடுங்கள்

என்று கூறுகின்றனர். அதற்குப் பிறகு அதை விட சிறந்த வரனை ஒருபோதும் அவர் கூறுவதில்லை. இவ்வாறு பொறாமை, வெறுப்புணர்வு, காழ்ப்புணர்ச்சி, தக்வாவிலுள்ள குறைவு ஆகியவற்றின் காரணமாக இரண்டு வீடுகளையும் சீர்குலைத்து விடுகின்றனர். சில நேரங்களில் பெண்வீட்டாருக்கும் பெண்ணுக்கும் அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக எப்படிப்பட்ட கருவிகளைப் பயன்படுத்துகின்றனர் என்றால் அந்த அப்பாவி பெண்கள் மீது அவப்பெயரின் கறை படிந்து விடுகின்றது. இவையனைத்தும் பொறாமையின் விளைவுகளேயாகும். எனவே, ஒரு பாவத்தைச் செய்த பிறகு அதிலிருந்து இன்னொரு பாவம் உருவாகிக் கொண்டே செல்கிறது. பெண்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமதப்படுகின்றது. எனவே அல்லாஹ்வின் தூதரின் இந்த கட்டளைக்கேற்ப செயல்படுங்கள். உங்களது உள்ளங்களை தக்வாவை வெளிப்படுத்திக் காட்டுவதுடன் அதை பயன்படுத்துங்கள். தக்வாவின் அளவுகோல் உங்களுக்கு அந்த அழகிய முன்மாதிரியாகும்.

அது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் உங்களுக்கு கூறியுள்ளான். நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கின்றது என்று கூறுகின்றான்.

ஒரு நம்பிக்கையாளர் யாரென்றால் அவரது தீங்கிலிருந்து முஸ்லிம் பாதுகாப்பாக இருப்பார் என்று மட்டும் பெருமானால் (ஸல்) அவர்கள் கூறவில்லை. மாறாக, நம்பிக்கையாளர் யாரென்றால் அவரிடமிருந்து மற்ற எல்லா மனிதர்களும் பாதுகாப்பில் இருப்பார்கள் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய மகத்துவமிக்க மனிதராக இருந்தார்கள் என்றால் படைப்பினங்களுடன் கருணையுடன் நடந்து கொள்வதில் அவர்களது முன்மாதிரி அதன் இறுதி எல்லையை அடைந்திருந்தது. அன்புடனும் பரிவுடனும் நடந்து கொள்வதிலும் அவர்கள் அதன் இறுதி எல்லையை அடைந்திருந்தார்கள். எந்தவொரு நல்லொழுக்கத்திலும் அதன் இறுதி எல்லையை அடையாமல் அவர்கள் இருக்கவில்லை.

எனவே இன்று நாம் நம்மிடையே தூய மாறுதலை ஏற்படுத்துவதற்காக ஒன்றுகூடியிருக்கும் போது இந்த முன்மாதிரிகளை மீண்டும் அலசிப் பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய முன்மாதிரி மூலம் நம்மை வந்தடைந்துள்ள அவர்களின் அந்த அறிவுரைகளை பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மார்க்கம் என்பது நல்லதை விரும்புவதாகும். யாருக்கு நல்லதை விரும்ப வேண்டும்? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், அல்லாஹ், அவனது வேதம், அவனது தூதர், முஸ்லிம் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோருக்காக நல்லதை விரும்ப வேண்டும் என்று பதில் கூறினார்கள்.

எனவே ஒரு உண்மையான நம்பிக்கையாளருக்கு தப்பி ஓடுவதற்கான எந்த வழியும் இல்லை. பொதுமக்களுக்கு நல்லதை விரும்புவதைக் கூட எந்த இடம் வரை அவர்கள் கொண்டு சென்று விட்டார்கள் என்றால் அதை செலுத்தாமல் அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும் செலுத்த முடியாது. அவனது வேதத்திற்குரிய உரிமையையும் செலுத்த முடியாது. அவனது தூதருக்குரிய உரிமையையும் செலுத்த முடியாது.

இந்த விஷயத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள். அதன் கருத்து இதுதான். அதாவது உண்மையான தக்வாவை ஒரே வகையிலுள்ள நன்மைகளைச் செய்வதால் மட்டும் பெற முடியாது. எதுவரை எல்லா விதமான நன்மைகளையும் செய்ய முயற்சி செய்யப்படுவதில்லையோ அதுவரை இது நடக்காது. பிறகு நமது எஜமானர் (ஸல்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயர்வான நல்லொழுக்கத்தைப் பெறுவதற்காக பணிவின் இறுதி எல்லையை அடைந்தவாறு எவ்வாறு துஆ செய்துள்ளார்கள்? என்று பாருங்கள். எந்த நபி தனது எதிரிகளின் மீது கருணை காட்டப்பட வேண்டும் என்பதற்காக தனது உயிரையே மாய்த்துக் கொள்பவராக இருந்தார்களோ, எவருடைய ஒவ்வொரு அணுவும் தன்னைப் பின்பற்றுபவர்களுக்காக அவர்கள் தலை முதல் கால் வரை ரஹ்மத் ஆக இருந்ததோ அவர்கள் தனது இறைவன் முன்னால் பணிவுடன் நிம்மதியற்ற நிலையில் இவ்வாறு துஆ செய்கின்றார்கள்.

அல்லாஹ்வே! நான் தீய ஒழுக்கம் மற்றும் தீய செயல்களிலிருந்தும் தீய விருப்பங்களிலிருந்தும் உன்னிடம் அடைக்கலம் தேடுகின்றேன்.

எனவே, இந்த தக்வா தொடர்பாகத்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இதயத்தை சுட்டிக் காட்டியவாறு தக்வா இங்கிருக்கின்றது என்று கூறினார்கள்.

இந்த முழுமை பெற்ற முன்மாதிரியைப் பின்பற்றி நடக்குமாறு அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டுள்ளான். எந்த அளவு நாம் இந்த துஆவை செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது? எந்த அளவு நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது? எந்த அளவு நாம் நம்மையே பரிசோதித்துப் பார்த்து வெட்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது?

**பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த நபர் ஒரு முஸ்லிமின் உலக அமைதியின்மையையும் துன்பத்தையும் அகற்றுவாரோ அல்லாஹ் கியாமத் நாளன்று அவரது அமைதியற்ற நிலையையும் அவரது துன்பத்தையும் அவரிடமிருந்து அகற்றி விடுவான்.

எவர் கஷ்டத்தில் இருக்கின்ற ஒருவருக்கு சுகத்தை தருவாரோ, அவருக்கு எளிதான நிலையை ஏற்படுத்துவாரோ அல்லாஹ் மறுமையில் அவருக்கு எளிதான நிலையை ஏற்படுத்துவான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைப்பாரோ அல்லாஹ் மறுமை நாளில் அவரது குறைகளை மறைப்பான். தனது சகோதரனுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றவருக்கு அல்லாஹ் உதவி செய்ய தயாராக இருக்கின்றான்.

நான் கியாமத் நாளன்று எல்லா விதமான அமைதியற்ற நிலையிலிருந்தும் தப்பித்து தூய்மையாக இருப்பேன் என்று எவர் வாதம் செய்ய முடியும்? நான் அதிகமாக நன்மையான செயல்களை சம்பாதித்து வைத்துள்ளேன் என்று எவரால் தனது செயல்கள் தொடர்பாக பெருமிதம் கொள்ள முடியும்? இந்த உலகம் மிகுந்த அச்சத்திற்குரிய இடமாகும். அல்லாஹ் கூறியுள்ள வழியில் சென்றவாறு நன்மைகளை செய்வதற்கான நல்வாய்ப்பு எனக்கு கிடைக்க வேண்டுமே! எந்த விஷயம் என்னை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லும் என்பது எனக்கு தெரியவில்லையே! அவன் எனது மன்னிப்பிற்கான வழிவகையைச் செய்ய வேண்டுமே! என்ற கவலை ஒவ்வொரு நொடியும் ஒரு நம்பிக்கையாளருக்கு இருக்க வேண்டும்.

நமது இறைவன் எவ்வளவு அன்பான இறைவனாக இருக்கின்றான்? நமது தூதர் எவ்வளவு அன்பான தூதராக இருக்கின்றார்கள்? அவர்களது ஒவ்வொரு செயல் தொடர்பாகவும் நமக்கு திறந்து தெளிவாக கூறியுள்ளார்கள். எந்தவொரு செயலுக்கும் அவர்கள் குறைவான முக்கியத்துவம் இருப்பதாகக் கூறவில்லை. தனது இறைவனை திருப்தி அடையும்படி செய்து தனது முடிவை சரிசெய்து கொள்ளும் முயற்சியல் இருக்கின்ற அந்த மக்கள் எத்தகைய நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள்? அதன் மூலம் அல்லாஹ் அவர்களது அமைதியின்மையை அகற்றி அவர்களுக்கு எளிதான நிலைமையை உருவாக்குகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருவர் மற்றவர் மீது அனுதாபத்துடன் நடந்து கொள்வது தொடர்பாகவும் பரிவுடன் நடந்து கொள்வது தொடர்பாகவும் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

மனித இனத்தின் மீது அன்பு காட்டுவதும், அவர்களுடன் பரிவுடன் நடந்து கொள்வதும் மிகப்பெரும் இபாதத் ஆகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு இது ஒரு மகத்தான வழியாகும். ஆனால் இந்த அம்சத்தில் மிகப்பெரும் பலவீனம் வெளிப்படுத்திக் காட்டப்படுவதை நான் பார்க்கின்றேன். மற்றவர்களை அற்பமாக பார்க்கின்றார்கள். அவர்களைப் பரிகாசம் செய்கின்றார்கள். அவர்களை கவனிப்பது மிகப்பெரும் விஷயமாகும். படைப்பினங்களிடம் அனுதாபம் காட்டுவது எத்தகைய செயல் என்றால் மனிதன் அதனை கைவிட்டு விட்டால் பிறகு படிப்படியாக அவன் மிருகமாகி விடுகின்றான். மனிதனின் மனிதத்தன்மை எதிர்பார்ப்பது இதுவேயாகும். எதுவரை ஒரு மனிதன் தனது சகோதரனுடன் பரிவுடனும், நல்ல முறையில் பரிமாறுவதன் மூலம் நன்மை செய்கின்றானோ அதுவரை தான் அவன் மனிதனாக இருக்கின்றான். அதில் எவ்வித பேதமும் அவர் காட்டக் கூடாது.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்ற மார்க்கத்தை விட இஸ்லாத்திற்கு இருக்கும் சிறப்புகளைப் பற்றியும் முஸ்லிம்களின் சிறப்பு பற்றியும் விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் எந்த அளவு பெற்றோர்கள், சந்ததிகள் மற்றும் ஏனைய உறவினர்களுக்குள்ள உரிமைகளை விளக்கிக் கூறியுள்ளதோ அதுபோன்ற உரிமைகள் மற்ற நூல்களில் எழுதப்பட்டிருக்கும் என்று நான் கருதவில்லை.

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:**

நீங்கள் இறைவனை வணங்குங்கள். அவனுக்கு இணையாக எதையும் வைக்காதீர்கள். உங்களது பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு நெருக்கமானவர்களுடனும் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்.

இந்த சொற்றொடரில் சந்ததிகள், சகோதரர், அருகிலுள்ள தூரத்திலுள்ள எல்லா உறவினர்களும் வந்துவிட்டார்கள்.

**பிறகு கூறுகின்றான்:**

அனாதைகளுடனும் நல்ல முறையில் பரிமாறுங்கள். ஏழைகளுடனும், அண்டை வீட்டுக்காரர்கள், அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்கள், ஏதாவதொரு பணியில் அல்லது பயணத்தில் உங்களுடன் இருப்பவர்கள், தொழுகையில் அல்லது மார்க்க் கல்வியைக் கற்பதில் உங்களுடன் இருப்பவர்கள், வழிப்போக்கர்கள், உங்களது ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்ற அனைத்து உயிரினங்கள் ஆகிய எல்லாரிடமும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். கர்வம் கொண்டோரையும் பெருமையடிப்போரையும் அல்லாஹ் தனது நண்பனாக ஆக்கிக் கொள்வதில்லை. (4:37) அத்தகையோர் மற்றவர்கள் மீது கருணை காட்டுவதில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனது அடியார்கள் மீது கருணை காட்டுங்கள். நாவாலோ, கைகளாலோ, வேறு எந்த திட்டத்தினாலோ அவர்கள் மீது அநீதியிழைக்காதீர்கள். படைப்பினங்களின் நன்மைக்காக முயற்சி செய்து கொண்டிருங்கள். எவர் மீதும் கர்வம் கொள்ளாதீர்கள். அவர்கள் உங்களுக்கு கீழ் இருப்பவர்களாக இருந்தாலும் சரியே. யாரையும் ஏசிப் பேசாதீர்கள். அவர்கள் உங்களை ஏசினாலும் சரியே. எளிமை, சகிப்புத்தன்மை, நல்லெண்ணம் கொள்வது ஆகியவற்றை கடைபிடித்து படைப்பினங்களிடம் அனுதாபம் காட்டுபவர்களாக ஆகி விடுங்கள். அதன் மூலமே நீங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவீர்கள். நீங்கள் பெரியவர்களாக இருந்தால் சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அற்பமாகப் பார்க்காதீர்கள். நீங்கள் அறிஞர்களாக இருந்தால் அறியாமையில் இருப்பவர்களுக்கு போதனை செய்யுங்கள். உங்களது பகட்டை வெளிப்படுத்திக் காட்டி அவர்களை இழிவுபடுத்தாதீர்கள். நீங்கள் பணக்காரர்களாக இருந்தால் ஏழைகளுக்கு தொண்டு செய்யுங்கள். சுயநலத்தைத விரும்புபவர்களாக அவர்கள் மீது கர்வம் கொள்ளாதீர்கள். அழிவின் வழிகளுக்கு அஞ்சுங்கள்.

இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தைச் சார்ந்துள்ள மக்களுக்கு வழங்கியுள்ள போதனைகளாகும். இவ்வாறே தமது உள்ளத்தில் உள்ளதை அவர்கள் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். இதன் மூலம் உலகின் முன்னால் ஒரு தூய முன்மாதிரியை நிலைநாட்டுபவர்களாக மட்டும் நாம் இருக்காமல் அல்லாஹ்வின் கருணையை பெறக்கூடியவர்களாகவும் நாம் ஆகிவிடுவோம்.

**ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

கருணை காட்டுபவர்கள் மீது ரஹ்மானான இறைவன் கருணை காட்டுவான். நீங்கள் பூமியில் இருப்பவர்கள் மீது கருணை காட்டுங்கள். வானத்தில் இருப்பவன் உங்கள் மீது கருணை காட்டுவான். எனவே, எப்போது நாம் இறைவனின் கருணையை வேண்டுகின்றோமோ, மேலும் அவனது கருணை எல்லா பொருள்களையும் சூழ்ந்துள்ளது என்பதை பொருட்டாக வைத்து அவனிடம் உதவி கேட்கின்றோமோ அத்துடன் படைப்பினங்கள் மீது கருணை காட்டும் உணர்வு முன்பை விட அதிகமாக நம்மிடம் இருக்க வேண்டும். அதிலும் விரிவான நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இந்த நாட்களில் எங்கு அஹ்மதிகள் இறைவணக்கங்கள், அல்லாஹ்வை நினைவு கூர்வது ஆகியவற்றின் மூலம் அல்லாஹ்வுடனுள்ள தொடர்பை வலுப்படுத்த முயற்சிகளை செய்கின்றனரோ அங்கு படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது, பகைமையை அகற்றுவது, நல்லொழுக்கத்தின் உயர்வான தரத்தை நிலைநாட்டுவது ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக ஒருவர் மற்றவர் மீதுள்ள உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். எதுவரை உள்ளத்திலுள்ள வெறுப்பு, பகை உணர்வு ஆகியவை விலகாதோ அதுவரை இது நடக்க முடியாது. உண்மையான அனுதாப உணர்வு ஒவ்வொருவரிடமும் எவ்வித வேறுபாடும் காட்டாமல் எவ்வித பேதமும் இல்லாமல் அனுதாபம் காட்டும்போதுதான் வெளிப்படும். இப்படிப்பட்ட உணர்வுதான் பிறகு ஒருவர் மற்றவருக்காக துஆ செய்வதன் பக்கமும் கவனமூட்டும். பிறகு ஒருவர் மற்றவருக்காக துஆ செய்வதன் மூலம் தக்வா நிலைநாட்டப்படும். உள்ளங்கள், ஆன்மாக்கள் ஆகியவை தூய்மை அடைவதற்கான வழிவகை உருவாகும். அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துவதன் புதிய அளவுகோல் நிலைநாட்டப்படும்.

எனவே, எந்த விஷயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பைஅத் உடன்படிக்கை செய்துள்ளார்களோ அது ஒரு சாதாரண விஷயமல்ல. இது நமது நிலைமைகளில் புரட்சியைக் கொண்டு வருவதற்கு மிகவும் அவசியமானதாகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கும் இது அவசியமானதாகும். சமுதாயத்தில் இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பரப்புவதற்கும் புரட்சியை ஏற்படுத்துவதற்கும் இது மிகவும் அவசியமானதாகும்.

எனவே, இந்த நாட்களில் இந்த உணர்வை அதிகரிக்கவும் அதை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கும் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை எல்லாருக்கும் வழங்குவதற்காக துஆவும் செய்யுங்கள். அல்லாஹ் நம் அனைவரையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்துள்ள துஆக்களுக்கு வாரிசாக்குவானாக! நம்மில் ஒவ்வொருவரும் மாநாட்டின் அருள்களை சேகரிப்பவர்களாக ஆவோமாக! நமது சந்ததிகளும் அஹ்மதிய்யத்துடன் வலுவாக பிணைந்திருக்கட்டுமாக! தங்களது நிலைமைகளில் ஒரு ஆன்மீக புரட்சியை உருவாக்குபவர்களாக அவர்கள் இருப்பார்களாக! அல்லாஹ் இந்த நாட்களிலும் வருங்காலத்திலும் எப்போதும் ஜமாஅத்திலுள்ள நபர்களை எதிரிகளின் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக!

அனுதாப உணர்வின் அடிப்படையில் அல்லாஹ் அழிவிலிருந்தும் உலகைக் காப்பாற்றுவதற்கு துஆ செய்யுங்கள். மிக வேகமாக அது அழிவை நோக்கிச் செல்கிறது.

முஸ்லிம் உம்மத்திற்காகவும் முஸ்லிம் அரசாங்கங்களுக்காகவும் துஆ செய்யுங்கள். இன்றைய நாட்களில் அவர்கள் பெரும் சோதனைக்கு ஆளாகியுள்ளனர். இந்த சோதனையின் கீழ் அவர்கள் ஏன் வந்துள்ளார்கள் என்பதை ஆய்வு செய்து பார்க்க அவர்கள் முயற்சி செய்வதில்லை. அல்லாஹ் இவர்களுக்கு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக!

இரண்டு விஷயங்களின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். தொழுகையின் பக்கம் இந்த நாட்களில் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். சுபுஹ் தொழுகையின் போது நான் பார்த்தேன். மக்கள் இங்குள்ள ஹாலில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தொழுகை முடிந்த பிறகும் கூட இங்கு அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தனர். ஒருபுறம் தஹஜ்ஜுத் தொழுகையும் இங்கே தொழ வைக்கப்பட்டது. பிறகு தொழுகைகளும் தொழ வைக்கப்பட்டது. இவர்களில் சிலர் இளைஞர்களாகவும் இருந்தனர். ஒருவர் நோயாளியாக இருந்தாலும் எந்நிலையிலும் அவர் தொழ வேண்டியது அவசியமானதாகும். அதற்குப் பிறகு தூங்கலாம். எனவே இனிமேல் இந்த முன்மாதிரி இந்த ஹாலில் நிலைநாட்டப்படக் கூடாது. மாநாட்டு அமைப்பாளர்கள் இதைப் பார்க்க வேண்டும். தர்பிய்யத் துறையைச் சார்ந்தவர்கள் ஒவ்வொருவரையும் எழுப்ப வேண்டும்.

இவ்வாறே நேற்று நான் பணியில் இருப்பவர்களிடமும் கூறினேன். எல்லாருக்கும் கூறுகின்றேன். பாதுகாப்பின் பக்கம் நமது பார்வை இருக்க வேண்டும். நாம் ஒரு ஹாலிற்குள் இருப்பதால் நல்ல பாதுகாப்பிற்கான ஏற்பாடு உள்ளது என்று நாம் கருத முடியாது. பாதுகாப்பிற்கான ஏற்பாடு உள்ளது என்பதில் சந்தேகமில்லை என்றாலும் கூட ஒவ்வொருவரும் தமது சுற்றுச்சூழலில் தமது வலப்பக்கமும் இடப்பக்கமும்

கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு தீங்கிலிருந்தும் அல்லாஹ் ஒவ்வொருவரையும் பாதுகாப்பானாக!

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைக்க இருக்கின்றேன். அது மதிப்பிற்குரிய ஸய்யிதா அமத்துல்லாஹ் பேகம் சாஹிபாவின் ஜனாஸாவாகும். இவர் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயில் சாஹிபின் மகளாவார். இவர் நேற்று வஃபாத் ஆனார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் தமது 92வது வயதில் வஃபாத் ஆகியுள்ளார்கள். இவர்கள் ஸய்யிதா சோட்டி ஆப்பா உம்மே மதீன் சாஹிபாவை விட சிறியவர் ஆவார்கள்.

மெட்ரிக் கல்வி பயின்ற பிறகு இவர் மார்க்கக் கல்வியில் தேர்ச்சி பெற்றார்கள். இவர்கள் மதிப்பிற்குரிய மர்ஹூம் பீர் சலூஹுத்தீன் சாஹிபின் மனைவியாவார்கள். இவர் அரசுப் பணியில் டெபுட்டி கமிஷனர் என்ற பொறுப்பிலோ அல்லது வேறு உயர் அரசுப் பணிகளிலிருந்த பிறகு இவர்கள் ஓய்வு பெற்றார்கள். 1943ம் வருடத்திலிருந்து 1944ம் வருடம் வரை முல்தானில் சதர் லஜ்னாவாக இருந்து தொண்டாற்றும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. பிரிவினைக்குப் பிறகு ராவல்பிண்டியில் செகரட்டரி மால் ஆகவும், ஏனைய ஜமாஅத் பொறுப்புகளிலும் இவர்கள் தொண்டாற்றினார்கள். 1971 ஆம் ஆண்டில் தனது கணவருடன் ஹஜ் செய்யும் நற்பாக்கியமும் இவருக்கு கிடைத்தது. ஒரு சிறப்பு அம்சம் இவரிடம் இருக்கின்றது. அதைப்பற்றி ஒவ்வொருவரும் எனக்கு எழுதியிருக்கின்றார்கள். அது என்னவென்றால், இவர்கள் சில விபத்துகளையும் பார்த்துள்ளார்கள். இளம் வயதில் இவரது மகன் ஒருவர் மரணமடைந்தார். கணவரின் மரணத்திற்குப் பிறகு தனது மகனுடன் இவர்கள் இருந்து வந்தார்கள். அந்த மகனும் திடீரென்று வஃபாத் ஆகி விட்டார். ஆனால், எப்போதும் இவர்கள் பொறுமையைக் கடைபிடித்து வந்தார்கள். ஒருபோதும் பொறுமையைக் கைவிடவில்லை. மிக அதிகமாக துஆ செய்பவர்களாகவும் இறைவணக்கத்தில் ஈடுபடுபவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். இபாதத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். தொழுகையை விட்டு விடாதீர்கள் என்றே பெரும்பாலும் அவர்கள் போதனை செய்து வந்தார்கள். சதகா அதிகமாக கொடுத்து வந்தார்கள். சில பெண்களுக்கு முறைப்படி உதவித் தொகையை வழங்கி வந்தார்கள். வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. உறவுகளைப் பேணுவது உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது ஆகியவற்றில் சிறந்த முன்மாதிரியாக அவர்கள் திகழ்ந்தார்கள். தமது குடும்பத்தினருடனும், தனது மாமனார் குடும்பத்தைச் சார்ந்தவர்களுடனும் – அவர்களில் பெரும்பாலார் அஹ்மதி அல்லாதவர்களாக இருந்தார்கள். இவர்கள் அனைவருடனும் இவர்கள் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொண்டார்கள். மாமனார் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இவர் கூறும் விஷயங்கள், அறிவுரைகள் ஆகியவற்றிற்கு மிகுந்த கண்ணியமளித்து வந்தனர். இவ்வாறே திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. எங்கு அவர் இருந்தாலும் அங்கு குழந்தைகளுக்கு அவர் திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுத்தார்கள். திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதற்கு முன்பு அதற்காக முழுமையாக தன்னை தயார் செய்து கொள்வார்கள். அதற்காக குறிப்பெடுத்து வந்தார்கள். தமது பிள்ளைகளுக்கு தற்பெருமையிலிருந்து விலகியிருக்கும்படி பெரும்பாலும் போதித்து வந்தார்கள். குறைந்த கல்வி அறிவுடைய உறவினர்கள் தொடர்பாக இவர்களுடன் ஒருபோதும் கர்வத்துடன் நடந்து கொள்ளக் கூடாது என்று போதனை செய்வார்கள்.

அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக! அவருடைய சந்ததிகளுடைய கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் பற்றுள்ளவர்களாக ஆக்குவானாக! நன்மைகளை செய்தவற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT JALSA GROUND, GERMANY**

**ON 01.06.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456